# கரூர் நகராட்சி
## கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2020ம் ஆண்டு ஜீன் 16ம் நாள் வியாழக்கிழமை மாலை 4.45மணிக்கு கரூர் நகராட்சியின் மன்ற சாதாரணக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் திருமதி.கே.எம்.சுதா, பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எட்., அவர்கள் தலைமையில் மன்றக் கூட்டத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

1)கரூர் நகராட்சிக்கு சொந்தமான ஆசாத் சாலையில் உள்ள நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி அலுவலகத்தில் கிழக்கு பகுதி, வடக்கு தெற்காக உள்ள கட்டிடங்கள் மற்றும் உயிரியல் ஆய்வகக் கட்டிடம் ஆகியவற்றை இடித்து அப்புறப்படுத்துதல் மற்றும் அதில் கிடைக்கப்பெறும் பொருட்களை எடுத்து செல்வதற்கு ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொதுஏலம் 16.06.2020ம் தேதி கோரப்பட்டதில் கலந்து கொண்டவர்களின் விவரம் பின்வருமாறு

ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்களின் விவரம்

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | மக்மா டிரேடிங்ஸ், ஈரோடு | ரூ.10,57,000/— |
| 2 | குட்வீல் ஸ்டீல்ஸ் திண்டுக்கல் | ரூ.10,61,000/— |
| 3 | சித்ரா டிரேடர்ஸ், ஈரோடு | ரூ.10,61,000/— |
| 4 | எம்.எஸ். எண்டர்பிரைசஸ், மதுரை | ரூ.10,35,000/— |
| 5 | ஆர்.எம்.கே. எண்டர்பிரைசஸ், சென்னை | ரூ.10,41,000/— |
| 6 | ஆர்.வேல்முருகன், மதுரை | ரூ.10,30,000/— |
| 7 | எம்.எஸ்.டிரேடர்ஸ், கரூர் | ரூ.10,56,789/— |
| 8 | ரபீ ரோடு வேர்ஸ், ஈரோடு | ரூ.10,62,500/— |
| 9 | சூர்யா எண்டர்பிரைசஸ், கோயம்புத்தூர் | ரூ.10,12,000/— |
| 10 | ஆர்.கே.வி. டிரேடர்ஸ், ராமநாதபுரம் | ரூ.10,60,000/— |
| 11 | எல்.லூர்துராஜ், திண்டுக்கல் | ரூ.10,65,000/— |
| 12 | கே.சின்னசாமி, கரூர் | ரூ.10,50,000/— |
| 13 | பிரபாகரன், கரூர் | ரூ.10,70,000/— |

பொதுஏலத்தில் கலந்து கொண்டவர்களின் விவரம்

| வ.எண் | பொதுஏலத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர் | ஏலக் கேள்வி தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | ஏ.பாலமுருகன், திண்டுக்கல் | ரூ.10,88,000/— |
| 2 | டி.ஐயப்பன், கரூர் | ரூ.10,80,000/— |
| 3 | எம்.எஸ்.எண்டர்பிரைசஸ், மதுரை | ரூ.10,87,000/— |
| 4 | ஆர்.கே.வி. டிரேடர்ஸ், ராமநாதபுரம் | ரூ.10,92,000/— |
| 5 | எம்.எஸ். டிரேடர்ஸ், கரூர் | ரூ.10,95,000/— |
| 6 | எம்.ராமலிங்கம், கரூர் | ரூ.10,89,000/— |

மேற்படி ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொதுஏலத்தில் அதிகபட்சமாக ஏலத் தொகையாக எம்.எஸ். டிரேடர்ஸ், கரூர் என்ற நிறுவனம் ரூ.10,95,000/— கோரியுள்ளார். ஆதலால் மேற்படி நிறுவனத்திற்கு நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி அலுவலகத்தில் கிழக்கு பகுதி, வடக்கு தெற்காக உள்ள கட்டிடங்கள் மற்றும் உயிரியல் ஆய்வகக் கட்டிடம் ஆகியவற்றை இடித்து அப்புறப்படுத்துதல் மற்றும் அதில் கிடைக்கப்பெறும் பொருட்களை எடுத்து செல்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி அலுவலகத்தில் கிழக்கு பகுதி, வடக்கு தெற்காக உள்ள கட்டிடங்கள் மற்றும் உயிரியல் ஆய்வகக் கட்டிடம் ஆகியவற்றை இடித்து அப்புறப்படுத்துதல் மற்றும்

அதில் கிடைக்கப்பெறும் பொருட்களை எடுத்து செல்வதற்கு எம்.எஸ். டிரேடர்ஸ், கரூர் என்ற நிறுவனத்திற்கு அதிகபட்ச ஏலத் தொகை ரூ.10,95,000/– மற்றும் GST 18% ரூ.1,97,100/– ஆக மொத்தம் ரூ.12,92,100/– (ரூபாய் பனிரெண்டு லட்சத்து தொன்னூற்றி இரண்டாயிரத்து நூறு மட்டும்) நகராட்சி கருவூலகத்தில் செலுத்திய பின் பணி உத்திரவு வழங்குவதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ1/1598/2020)

தீர்மான எண்.2239 அனுமதிக்கப்பட்டது.

2)கரூர் மாவட்டத்தில் கரூர் நகராட்சி சிறப்புநிலை நகராட்சியாகும். இந்நகராட்சியுடன் அருகிலுள்ள இனாம்கரூர் பேரூராட்சி பகுதிகள், தாந்தோணி பேரூராட்சி பகுதிகள் மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி பகுதிகள் அரசாணை நிலை எண்.19, நாள்.14.01.2011ன்படி ஒருங்கிணைக்கப்பட்டு 53.26 சதுர கி.மீ., பரப்பளவில் 48 வார்டுகளைக் கொண்டுள்ளது. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,14,412 ஆகும். கரூர் நகரமானது ஜவுளித் தொழில் ஏற்றுமதி செய்தல் மற்றும் பஸ் பாடி பில்டிங் பணிகள் அதிக அளவில் நடைபெறும் நகரமாக உள்ளது. இதனால் நாள்தோறும் பணி நிமித்ததாக வந்து செல்லும் பயணிகள் சுமார் 50000 அளவில் உள்ளது.

இனாம்கரூர் பகுதியானது 1 முதல் 14 வார்டுகளையும், 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 67,131 பேரும் 22,408 குடியிருப்புகள் கொண்டு 11.26 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது.

கரூர் பகுதியானது 15 முதல் 32 வார்டுகளையும், 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 70,980 பேரும் 17,412 குடியிருப்புகள் கொண்டு 6.03 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது.

சணப்பிரட்டி பகுதியானது 33 முதல் 36 வார்டுகளையும், 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 22,447பேரும் 7,434 குடியிருப்புகள் கொண்டு 7.68 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது.

தாந்தோணி பகுதியானது 37 முதல் 48 வார்டுகளையும், 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 53854 பேரும் 20,182 குடியிருப்புள் கொண்டு 29.29சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது.

இனாம்கரூர், தாந்தோணி மற்றும் சணப்பிரட்டி பகுதிகள் நாளுக்கு நாள் விரிவாக்கம் அடைந்து வரும் பகுதியாக உள்ளது. அவ்வாறு உருவாகியுள்ள பகுதிகளில் வடிகால் வசதி இன்மையால் வீடுகளுக்கு அருகிலேயே நீர் உறிஞ்சும் குழிகள் அமைத்து கழிவுநீரை வெளியேற்றுவதால், அப்பகுதி பொதுமக்களுக்கு பொதுசுகாதாரக் கேடு ஏற்படுகிறது. இப்பகுதிகளில் சேகரமாகும் மழைநீரையும் வெளியேற்ற வழியில்லாமல் உள்ளது. எனவே, பொதுமக்களின் பொதுசுகாதார நலன் கருதி விரிவாக்கம் அடைந்த பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

எனவே, அனைத்து வார்டு பொதுமக்களின் பொதுசுகாதார நலன் கருதி இப்பகுதிகளில் மழைநீர் வடிகால் இல்லாத பகுதிகளில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கவும் விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க தனியார் ஆலோசகர் ஒருவரை நியமனம் செய்யவும், மேற்படி பணிக்கு அரசின் திட்ட நிதியில் முழு மான்யம் பெற நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம். (இ1/2429/2020)

தீர்மான எண்.2240 அனுமதிக்கப்பட்டது.

3)கரூர் மாவட்டத்தில் கரூர் நகராட்சி சிறப்புநிலை நகராட்சியாகும். இந்நகராட்சியுடன் அருகிலுள்ள இனாம்கரூர் பேரூராட்சி பகுதிகள், தாந்தோணி பேரூராட்சி பகுதிகள் மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி பகுதிகள் அரசாணை நிலை எண்.19, நாள்.14.01.2011ன்படி ஒருங்கிணைக்கப்பட்டு 53.26 சதுர கி.மீ., பரப்பளவில் 48 வார்டுகளைக் கொண்டுள்ளது. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,14,412 ஆகும். கரூர் நகரமானது ஜவுளித் தொழில் ஏற்றுமதி

செய்தல் மற்றும் பஸ் பாடி பில்டிங் பணிகள் அதிக அளவில் நடைபெறுவதால் வெளிமாநிலங்களில் இருந்து தொழிலாளர்கள் அதிகமாக வருகின்றனர். இதனால் நாள்தோறும் பணி நிமித்ததாக வந்து செல்லும் பயணிகள் சுமார் 50000 அளவில் உள்ளது.

இனாம்கரூர் பகுதியானது 1 முதல் 14 வார்டுகளையும், 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 67,131 பேரும் 22,408 குடியிருப்புகள் கொண்டு 11.26 சதுர கிலோமீட்டர் பரப்பளவிலும், கரூர் பகுதியானது 15 முதல் 32 வார்டுகளையும், 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 70,980 பேரும் 17,412 குடியிருப்புகள் கொண்டு 6.03 சதுர கிலோமீட்டர் பரப்பளவிலும், சணப்பிரட்டி பகுதியானது 33 முதல் 36 வார்டுகளையும், 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 22,447பேரும் 7,434 குடியிருப்புகள் கொண்டு 7.68சதுர கிலோமீட்டர் பரப்பளவிலும் மற்றும் தாந்தோணி பகுதியானது 37 முதல் 48 வார்டுகளையும், 2011ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 53854பேரும் 20,182குடியிருப்புகள் கொண்டு 29.29சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது.

கரூர் நகரின் மையப்பகுதியில் சின்னாண்டாங்கோவில் முதல் காமதேனு நகர் வரை 3700.00மீட்டர் நீளத்திற்கு இரட்டை வாய்க்கால் அமைந்துள்ளது. கடந்த காலங்களில் அமராவதி ஆற்றிலிருந்து இரட்டை வாய்க்கால் பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டு வந்தது. நாளடைவில் பாசனம் குறைந்தவிட்ட காரணத்தினால் இரட்டை வாய்க்காலில் தண்ணீர் திறந்துவிடுவதில்லை. மழைக்காலங்களில் நகரப் பகுதிகளில் சேகரமாகும் மழைநீர் மட்டும் சென்று கொண்டிருந்தது. இந்த இரட்டை வாய்க்காலில் முட்புதர்கள் ஆங்காங்கே ஏற்பட்டுள்ளதால் மழைநீர் செல்ல வழியில்லாமல் இரட்டை வாய்க்காலிலேயே தேங்கி பொதுமக்களுக்கு சுகாதாரக்கேடு ஏற்படுகிறது. இதனை தவிர்க்கும்வகையில் UIDSSMT திட்டத்தில் 2006–2007ம் ஆண்டில் ரூ.3.50கோடி மதிப்பீட்டில் 2000.00மீட்டர் நீளத்திற்கு இரட்டை வாய்க்கால் சீரமைக்கப்பட்டது. மேலும் 2018–2019ம் நிதியாண்டில் IUDM திட்டத்தின்கீழ் ரூ.3.62கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சுமார் 640மீட்டர் நீளத்திற்கு பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும் கரூர் மாவட்டத்தில் அமைந்துள்ள கல்குவாரிகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் பெரும்பான்மையானவர்கள் கரூர் நகரத்தில் உள்ள இரட்டைவாய்க்கால் பகுதிக்கு மிக அருகில் வசித்து வருகின்றனர். மழைக்காலங்களில் இரட்டை வாய்க்காலில் மழைநீர் தேங்கா வண்ணம் இருக்கவும், இரட்டைவாய்க்கால் பகுதிக்கு அருகில் உள்ள கல்குவாரி தொழிலாளர்களின் பொது சுகாதாரத்தை பேணி காக்கும் வகையில் இரட்டை வாய்க்காலினை சீரமைக்க ரூ.2.50கோடி மதிப்பீட்டில் சுமார் 435மீட்டர் நீளத்திற்கு பணியினை மேற்கொள்வதற்கு கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது.

எனவே கரூர் நகராட்சிக்குட்பட்ட இரட்டைவாய்க்கால் பகுதிக்கு அருகில் வசிக்கும் கல்குவாரி தொழிலாளர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோரின் பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டு நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள இரட்டை வாய்க்காலில் மழைநீர் தேங்காவண்ணம் வடிகால் மற்றும் இலகுரக வாகனம் செல்லும் வகையில் சாலை ஆகியவை அமைக்கும் பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2.50கோடி கனிம வள நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்தும், உரிய நிர்வாக அனுமதியும் வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் கரூர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம். (இ1/2484/2020)

தீர்மான எண்.2241 அனுமதிக்கப்பட்டது.

4)கரூர் மாவட்டத்தில் கரூர் நகராட்சி சிறப்புநிலை நகராட்சியாகும். இந்நகராட்சியுடன் அருகிலுள்ள இனாம்கரூர் பேரூராட்சி பகுதிகள், தாந்தோணி பேரூராட்சி பகுதிகள் மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி பகுதிகள் அரசாணை நிலை எண்.19, நாள்.14.01.2011ன்படி ஒருங்கிணைக்கப்பட்டு 53.26 சதுர கி.மீ., பரப்பளவில் 48 வார்டுகளைக் கொண்டுள்ளது. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,14,412 ஆகும். கரூர் நகரமானது ஜவுளித் தொழில் ஏற்றுமதி செய்தல் மற்றும் பஸ் பாடி பில்டிங் பணிகள் அதிக அளவில் நடைபெறுவதால் வெளிமாநிலங்களில் இருந்து தொழிலாளர்கள் அதிகமாக வருகின்றனர். இதனால் நாள்தோறும் பணி நிமித்ததாக வந்து செல்லும் பயணிகள் சுமார் 50000 அளவில் உள்ளது.

இனாம்கரூர் பகுதியானது 1 முதல் 14 வார்டுகளையும், 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 67,131 பேரும் 22,408 குடியிருப்புகள் கொண்டு 11.26 சதுர கிலோமீட்டர் பரப்பளவிலும், கரூர் பகுதியானது 15 முதல் 32 வார்டுகளையும், 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 70,980 பேரும் 17,412 குடியிருப்புகள் கொண்டு 6.03 சதுர கிலோமீட்டர் பரப்பளவிலும், சணப்பிரட்டி பகுதியானது 33 முதல் 36 வார்டுகளையும், 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 22,447பேரும் 7,434 குடியிருப்புகள் கொண்டு 7.68சதுர கிலோமீட்டர் பரப்பளவிலும் மற்றும் தாந்தோணி பகுதியானது 37 முதல் 48 வார்டுகளையும், 2011ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 53854பேரும் 20,182குடியிருப்புகள் கொண்டு 29.29சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது.

கரூர் மாவட்டத்தில் அமைந்துள்ள கல்குவாரிகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் பெரும்பான்மையானவர்கள் கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசித்து வருகின்றனர். மேற்படி கல்குவாரி தொழிலாளர்கள் தினந்தோறும் வேலைக்கு சென்று வருவதினால் அவர்களின் ஆரோக்கியத்தினை காக்கும் வகையில் புதிதாக நவீன உடற்பயிற்சி கூடம் அமைப்பதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே தொழிலாளர்கள் தினந்தோறும் உடற்பயிற்சி செய்வதன் மூலம் ஆரோக்கியமாகவும் மற்றும் திடகாத்திரமாகவும் இருக்க முடியும் என்பதினால் நவீன உடற்பயிற்சி கூடம் அமைக்கும் பணியினை ரூ.1.25கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது.

எனவே கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் கல்குவாரி தொழிலாளர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோரின் உடல்நிலையினை சீராக வைக்க வேண்டியதைக் கருத்தில் கொண்டு நகரின் மையப்பகுதியான கரூர் பேருந்து நிலையத்திற்கு மிக அருகில் உள்ள திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள நவீன உடற்பயிற்சி கூடம் அமைக்கும் பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1.25கோடி கனிம வள நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்தும், உரிய நிர்வாக அனுமதி வழங்கக் கோரி மாவட்ட ஆட்சித் தலைவர் கரூர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
மன்றம் அனுமதிக்கலாம். (இ1/2484/2020)

தீர்மான எண்.2242 அனுமதிக்கப்பட்டது.

5)கரூர் நகராட்சியில் இயங்கி வந்த மின் விநியோகம் அரசின் கொள்கை முடிவால் ஆற்றல் துறை அரசாணை எண்.156 நாள்.29.12.1994ன் அரசாணைப்படி 30.04.1995 அன்று தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர் கூட்டாய்வு தீர்மானம் நாள்.24.11.1995ன் அரசு செயலர் கூட்டாய்வில் இழப்பீட்டுத் தொகை பிரேரணை முடியும் வரை மின் கட்டண தொகை செலுத்த நிர்பந்திக்கக்கூடாது என தீர்மானிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் கரூர் நகராட்சிக்கு லாபத்தை ஈட்டு தந்த மின் விநியோகத்தை மின்வாரியத்திடம் ஒப்படைத்தமைக்கு மின் விநியோக ஆர்ஜிதச் சட்டம் 1954ன் இழப்பீட்டுத் தொகை பெறுவதற்கான வழிவகை A,B,C ன் நிலைகளில் கரூர் நகராட்சி நிலை – A னை தேர்வு செய்து, இழப்பீட்டுத் தொகை நிர்ணயம் செய்வதற்காக ஆற்றல் துறை அரசாணை எண்.158 நாள்.29.12.1994ன்படி நியமிக்கப்பட்ட பொறுப்பு அலுவலரிடம் ரூ.11,45,30,683/-ஐ வழங்கக் கோரி பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த பிரேரணையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர் கூட்டாய்வு தீர்மானம் நாள்.24.11.1995ன்படி மின்வாரிய பிரதிநிதி மின்கட்டண நிலுவை வரவினம் ரூ.81,15,171/- ஐ நகராட்சி வழங்க ஒத்திசைவு அளித்துள்ளார். கரூர் நகராட்சி இழப்பீட்டுத் தொகை கோரி அளித்த கணக்கீட்டுகளை ஏற்காத நிலையில் பொறுப்பு அலுவலர் மின் விநியோக ஆர்ஜித விதி சட்டம் 1995 A ன் விதிமுறைப்படி இறுதி ஐந்து ஆண்டு நிகர லாபரங்களை ஏற்காது மின்வாரியத்தினர் அளித்த விவரங்களை ஏற்று கரூர் நகராட்சி ரூ.44,84,337/-யை மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டும் என பரிந்துறை செய்து கரூர் நகராட்சி ஏற்காத நிலையிலேயே அரசு தலைமை மின் ஆய்வாளர் அவர்களின் இழப்பீட்டுத் தொகை கணக்கீடு பட்டியல் நாள். 03.04.1997ன்படி அரசாணை வழங்கப்பட்டன.

அரசு தலைமை மின் ஆய்வாளர் அவர்களின் இழப்பீட்டுத் தொகை கணக்கீடு பட்டியல் நாள்.03.04.1997ன் அரசாணையின்படி கரூர் நகராட்சியின் வருவாய் இழப்பு தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக அரசின் கவனத்திற்கு கொண்டு சென்ற நிலையில் இன்றுவரை முடிவு எட்டப்படாத நிலையில் உள்ளன. மேலும் இழப்பீட்டுத் தொகை பெறுவது தொடர்பாக

கீழ்காணும் விவரப்படி கரூர் நகராட்சியின் மூலம் பிரேரணைகள் தொடர்ந்து சமர்ப்பிக்கப் படுகின்றன.

1) தமிழ்நாடு மின் விநியோக பொறுப்பு ஒப்படைப்பு மற்றும் ஏற்பு விதி 1954 ல் உபவிதி A ன் படி இழப்பீட்டுத் தொகை கணக்கீடு செய்து வழங்கப்பட வேண்டும்.

| வ.எண் | இழப்பீட்டுத் தொகை கணக்கிற்குரிய வருடம் | தணிக்கை அறிக்கையின் ஆண்டு நிகர லாபம் |
|---|---|---|
| 1 | 1990–91 | 486240.07 |
| 2 | 1991–92 | 1853278.83 |
| 3 | 1992–93 | 1408642.11 |
| 4 | 1993–94 | 4195900.33 |
| 5 | 1994–95 | 1218138.96 |
| | | 9192200 /5<br>=1838440.06 |
| | **20 Times** | **3,67,68,801.20** |

2) மின் விநியோகம் கையகப்படுத்தாதற்கு முன்னர் 16.02.1995 முதல் 30.04.1995 வரை கரூர் நகராட்சி பயனீட்டாளர்களுக்கு வழங்கிய மின்சாரத்திற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தால் வசூலிக்கப்பட்ட தொகை ரூ.81,15,175/- யை கரூர் நகராட்சி வரவினமாக மின்வாரியத்தால் ஒப்பு கொள்ளப்பட்டும் இதுநாள் வரை மேற்படி தொகை கரூர் நகராட்சிக்கு வழங்கப்படிவில்லை.

3) 30.04.1995க்கு முன்னர் உள்ள மின் பயன்பாட்டிற்கான மின் கட்டணங்கள் ரூ.1,08,49,327/- யை மின் விநியோக பொறுப்பு ஒப்படைப்பு விதி 1954ல் அனுமதிக்கப்பட்ட வட்டித் தொகையுடன் வழங்க வேண்டும்.

4) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 6544/2005/இ1/ நாள்.26.04.2018ன்படி 01.05.1995 முதல் 30.06.2000 வரை நகராட்சியில் இயங்கி வந்த அலுவலகத்திற்கான வாடகை ரூ.33,250 x 62 மாதம் = ரூ.20,61,500/- யை 6% வட்டியுடன் வழங்கப்பட வேண்டும்

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.179 நாள்.26.1082015ன் அரசு செயலாளர் அவர்களின் கூட்ட தீர்மானத்தின்படி கரூர் நகராட்சிக்கு வழங்க வேண்டிய தொகைக்கு வட்டி கணக்கிடக் கூடாது. தமிழ்நாடு மின்வாரியத்திற்கு வழங்க வேண்டிய மின் கட்டண நிலுவை தொகைக்கு BPSC கணக்கீடு செய்யக்கூடாது என முடிவு எடுக்கப்பட்டுள்ளதால் பின்வரும் விபரங்கள்படி இழப்பீட்டுத் தொகையும் மற்றவிரவினங்கள் கரூர் நகராட்சிக்கு மின் வாரியத்திடம் பெற்று தர கோரப்படுகின்றன.

| | | அசல் | வட்டி |
|---|---|---|---|
| 1 | கரூர் நகராட்சிக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் வழங்க வேண்டிய நிகர ஈட்டுத் தொகை Basis "A" 1954 Act., ன்படி அசல் (வட்டியின்றி) As per AG Audit Report | 3,67,68,801 | ~~ |
| 2 | 30.04.1995க்கு முன் உபயோகப்படுத்தப்பட்ட நிலுவை மின் கட்டண தொகை (2001-2002 மானிய தொகையில் கழிக்கப்பட்டவை) | 1,08,49,327 | 44,13,038 |
| 3 | 30.04.1995க்கு முன் வரவேண்டிய மின் கட்டணம் 04/95க்கு பிறகு தமிழ்நாடு மின்சார வாரியம் வசூல் செய்த L.T. மின் கட்டணம் கரூர் நகராட்சிக்கு வரவேண்டிய அசல் (05/95 மற்றும் 06/95 மாதத்தில் வசூல் செய்த தொகை) | 81,15,145 | ~~ |
| 4 | KMEU மின் விநியோகம் கரூர் நகராட்சிக்கு சொந்தமான அலுவலக கட்டிடம் பயன்படுத்திய வகையில் கட்டிட வாடகை அசல் மற்றும் வட்டி (33250 x 62x 6% ) 01.05.1995 to 30.06.2000 | 23644824 | ~~ |
| | | 79378097 | 44,13,038 |
| | கரூர் நகராட்சிக்கு வரவேண்டிய (அசல் + வட்டி) மொத்த ஈட்டுத் தொகை | **8,37,91,135** | |

| | | |
|---|---|---|

மின்விநியோகப் பொறுப்பு மின்வாரியத்திடம் ஒப்படைத்தமைக்கு கரூர் நகராட்சிக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் ஈட்டுத் தொகை ரூ.8,37,91,135/—யை வழங்குவதற்கு கருத்துரு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். (இ3/7382/1998/

தீர்மான எண்.2243 அனுமதிக்கப்பட்டது.

**6)**கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33 முதல் 36 வரையிலான சணப்பிரட்டி பகுதிக்கு காவிரி ஆற்றில் கட்டளை என்னுமிடத்தில் 2004ம் ஆண்டு அமைக்கப்பட்ட தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நீரேற்றம் செய்து மூலக்காட்டானூர் நீருந்து நிலையம் மூலமாக அப்பகுதியில் அமைந்துள்ள 13 நீர்தேக்கத் தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குறைந்த கொள்ளளவு கொண்ட நீர்தேக்கத் தொட்டிகள் மற்றும் சிறிய விட்டமுள்ள குழாய்கள் ஏற்கெனவே ஊராட்சியாக இருந்த பொழுது அமைக்கப்பட்டுள்ளது. தற்போது விரிவாக்கம் அடைந்து வரும் பகுதியாக உள்ளதால் கூடுதல் நீராதாரம் ஏற்படுத்தவும், சணப்பிரட்டி பகுதியில் கரூர் அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட்டுள்ளதால் மருத்துவக்கல்லூரிக்கு தினசரி 1.50MLD தேவைப்படுவதாலும் சணப்பிரட்டி பகுதிக்கு கூடுதல் குடிநீர் அபிவிருத்தி திட்டத்தினை செயல்படுத்த TNUIFSL நிறுவனத்தின் மூலம் தனியார் ஆலோசகரை நியமனம் செய்து விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் மூலம் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும் TNUIFSL நிறுவனத்தின் மூலம் தனியார் ஆலோசகர் நிறுவனமான VITYA CONSULTANCY PVT LTD, Secundrabad அவர்களை நியமனம் செய்யப்பட்டதில் கூடுதல் குடிநீர் அபிவிருத்தி திட்டத்திற்கான Interim Report தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனத்தினர் கூடுதல் குடிநீர் அபிவிருத்தி திட்டத்திற்காக விரிவான திட்ட மதிப்பீட்டில் நீருந்து நிலையம் மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைப்பதற்கு 16.06.2020ம் தேதிய கடிதத்தில் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதி சர்வே எண்.1407, 1409ல் 26x96மீ நீளத்திற்கு நீருந்து நிலையமும் மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைக்கவும், மேலும் முல்லைநகர் பகுதி சர்வே எண்.1405ல் 30மீx30மீ நீளத்திற்கு மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைப்பதற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளதின்படி சணப்பிரட்டி பகுதியில் குடிநீர் தேவையின் அவசியத்தை கருத்தில் கொண்டு கூடுதல் குடிநீர் அபிவிருத்தி திட்டம் செயல்படுத்த வீட்டு வசதி வாரிய குடியிருப்பு மற்றும் முல்லைநகர் ஆகிய பகுதிகளில் நீருந்து நிலையம் மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைப்பதற்கு தடையின்மை சான்று வழங்கவும், விரிவான திட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். (இ1/4618/2018)

தீர்மான எண்.2244 அனுமதிக்கப்பட்டது.

**7)**கரூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நபா3) துறை நாள்.30.04.1997ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி கீழ்க்கண்டவாறு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

| வ.எண் | | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 1 | தற்போதைய மக்கள் தொகை | 225132 |
| | 2 | நகரின் பரப்பளவு | 53.26 சதுர கிமீ |
| | | **வரிவிதிப்புகள்** | |
| | 3 | குடியிருப்புகள் | 64155 |
| | 4 | வணிக நிறுவனங்கள் | 6941 |
| | 5 | தொழிற்சாலைகள் | 440 |
| | | **மொத்த வரிவிதிப்புகள்** | **71536** |
| | 6 | சாலைகளின் நீளம் | 328.841 கிமீ |

| | | | |
|---|---|---|---|
| | 7 | வடிகால்களின் நீளம் | 286.920 கிமீ |
| | 8 | பேருந்து நிலையம் | 1 |
| | 9 | பொது கழிப்பிடங்கள் | 2 |
| | 10 | சமுதாய கழிப்பிடங்கள் | 13 |
| | | **வாகன விபரங்கள்** | |
| | 11 | டம்பர் பிளேசர் | 6 |
| | 12 | டிப்பர் லாரி | 7 |
| | 13 | காம்பேக்டர் | 2 |
| | 14 | டம்பர் பிளேசர் பின் | 180 |
| | 15 | காம்பேக்டர் பின் | 100 |
| | 16 | தினசரி சேகரமாகும் திடக்கழிவுகளின் அளவு | 71 மெட்ரிக் டன் |
| | 17 | தினசரி சேகரிக்கப்படும் திடக்கழிவுகளின் அளவு | 71 மெட்ரிக் டன் |
| 2 | | தற்போதைய நிரந்தர துப்புரவுப்பணியாளர்கள் | 245 |
| 3 | | அரசாணை (நிலை) எண் 101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி) துறை நாள் 30.04.1997 ன் படி கரூர் நகராட்சி திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்திற்கு கீழ்கண்டவாறு பணியாளர்கள் தேவைப்படுகிறது. | |
| 4 | | **தேவைப்படும் பணியாளர்கள்** | |
| | 1 | துப்புரவு பணிக்கு (67436/250 × 3) | 858 |
| | 2 | லாரிகளுக்கு (6 × 4) | 24 |
| | 3 | டம்பர் பிளேசர் (6 × 1) | 6 |
| | 4 | காம்பாக்டர் (2 × 5) | 10 |
| | 5 | கலவை உரக்கிடங்கு | 8 |
| | 6 | நகராட்சி வணிக வளாகங்கள் (8 × 2) | 16 |
| | 7 | பேருந்து நிலைய கழிவறைகள் (2 × 2) | 4 |
| | 8 | பேருந்து நிலையம் ஏ கிரேடு | 4 |
| | 9 | நுண் உயிர் உரம் செயலாக்க மையம் (MCC) (6 × 6) | 36 |
| | | **தேவைப்படும் மொத்த பணியாளர்கள்** | **966** |
| 5 | | தற்போது பணியில் உள்ளவர்கள் | 245 |
| | 1 | தனியார் மூலம் ஒப்பந்த பணியாளர்கள் ( Out Sourcing ) நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் K.Dis/6093/P3/2018 Dt.,07.04.2018 | 190 |
| | 2 | தனியார் மூலம் ஒப்பந்த பணியாளர்கள் ( Out Sourcing ) நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் K.Dis/22098/P3/2016 Dt.,31.08.2016 | 213 |
| | 3 | தனியார் மூலம் ஒப்பந்த பணியாளர்கள் (Out Sourcing ) நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் K.Dis/28369/J3/2019 Dt.,04.02.2018 | 220 |
| | | தற்போதுள்ள மொத்தம் பணியாளர்கள் | **868** |
| | | நிகரம் தேவைப்படும் பணியாளர்கள் | **98** |

இந்நிலையில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் திடக்கழிவுகளை அகற்ற வரிசை எண்.5 (2)ல் கண்டுள்ள 213 துப்புரவு பணியாளர்களை கொண்டு அகற்றும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.25455/பி3/2012 நாள்.28.06.13ன்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று பணி மேற்கொண்டு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s ourland Engineering works Pvt., Ltd., சென்னை நிறுவனத்திற்கு கரூர் நகர்மன்ற தீர்மான எண்.16 நாள்.29.12.2016ல் அனுமதி பெறப்பட்டு31.03.2017ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் நீட்டிப்பு வழங்கி பணி நடைபெற்று வருகிறது. மேற்படி நிறுவனத்திற்கு கடந்த ஆண்டு நகர்மன்ற தீர்மான எண்.3808ன்படி அனுமதிக்கப்பட்ட பணியானது தற்பொழுதுவரை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எனவே பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி ஏற்கனவே 213 பணியாளர்களை பெற்று நடைபெற்றுவரும் பணியினை புதிய ஒப்பந்தபுள்ளிகள் கோரி வேலை புதிய நிறுவனத்திற்கு உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள உரிய அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் பெற மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**1)**பொதுசுகாதார அவசர அவசியம் கருதி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் உரிய அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி புதிய நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்..
**2)**மேற்படி செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(எச்1/1853/2020)

தீர்மான எண்.2245 அனுமதிக்கப்பட்டது.

**8)**கரூர் நகராட்சியில் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி திட்டம் **2018–19**ன்கீழ் ரூ.**18.00**கோடி மதிப்பீட்டில் கரூர் இரயில் நிலையம் முதல் தேசிய நெடுஞ்சாலை எண்.7 வரை இணைக்கும் **அம்மா சாலை** அமைக்கும் பணியானது ஒப்பந்ததாரர் மூலம் பணி நடைபெற்று வருகிறது.

மேற்படி இடத்தில் குகைவழிப்பாதையின் அருகில் தாங்குச்சுவர் அமைக்கும் பகுதிக்கு அருகில் உள்ள இரண்டு மின்மாற்றிகள் தாங்குச்சுவர் அமைப்பதற்கு இடையூறுகளாக இருப்பதால் அருகில் உள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான மயான பகுதியில் மின்மாற்றிகளை இடம் மாற்றி தருமாறு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் கரூர் அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. மேற்படி இரண்டு மின்மாற்றிகளை இடம் மாற்றி அமைப்பதற்காக மதிப்பீடு கட்டணம் ரூ.**28,54,130/–**யை செலுத்துமாறு தலைமை பொறியாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.MEMO.NO.EC/D/TRY/TECH/AEE/DEV/F.DCV/Pro.No.05/C.50/2020-21 Dated. 22.05.2020 ல் தெரிவிக்கப்பட்டதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
**1)**இரண்டு மின்மாற்றிகளை இடம் மாற்றுவதற்குத் தேவையான முழு உதிரி பாகங்கள் நகராட்சியால் வாங்கி வழங்கிடவும், மின் மாற்றிகளை மாற்றுவதற்கான திருத்திய மதிப்பீடு கட்டணத்தைக் கோரிப் பெற்று அத்தொகையினை மட்டும் செலுத்த அனுமதிக்கலாம்.
(இ1/7170/2017)

தீர்மான எண்.2246 தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திடம் திருத்திய மதிப்பீட்டு கட்டணத்தைப் பெற்று அத்தொகையினை மட்டும் செலுத்த அனுமதிக்கப்பட்டது.

**9)**கரூர் நகராட்சிக்குட்பட்ட வெங்கமேடு – புகளூர் மெயின் ரோட்டில் வாய்க்கால் தரைபாலம் புதிதாக அமைக்கும் பணி நெடுஞ்சாலைத் துறை மூலம் நடைபெற்று வருகிறது. தரைபாலம் அமைக்கப்படும் இடத்தில் இடையூறாக உள்ள மின்கம்பத்தை மாற்றியமைக்க இவ்வலுவலக கடிதம் நாள்.**26.05.2020** மூலம் தமிழ்நடு மின்சார வாரியத்திற்கு அனுப்பியமைக்கு மின் வாரியத்திடம் இருந்து வரப்பெற்ற மதிப்பீட்டு பட்டியல் LR.No.AE/JE/O&M/VGM/F.App.Trakcing/D.No.25/ 20-21 நாள்.**01.06.2020**ன்படி தொகை ரூ.**14,360/–**யை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது. செலவினத்தினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920** பிரிவு **15**ன்கீழ் மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.

அலுவலகக் குறிப்பு
**1)**மன்றம் அனுமதிக்கலாம்.
**2)**மேற்கண்ட பணி மேற்கொள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மதிப்பீட்டு பட்டியல் தொகை ரூ.**14,360/–**யை பொது நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.
**3)**செலவினத்தினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920** பிரிவு **15**ன்கீழ் மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம். (இ3/2225/2020)

தீர்மான எண்.2247 பதிவு செய்யப்பட்டது.

**10)**கரூர் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட குத்தகை இன கடைகள் **9** ஆண்டுகள் தொகுப்பு காலம் முடிவுற்ற கடைகள் அரசாணையின்படி வாடகை மறுநிர்ணயம் செய்ய மண்டல அளவிலான வாடகை நிர்ணய குழுவால் நிர்ணயம் செய்து ஒப்புதல் வழங்கப்பட்ட கடை வாடகை தொகையினை ஏற்று மேலும் **9** ஆண்டுகள் கால நீடிப்பு செய்ய விருப்பம் இருப்பின் சம்மதம் தெரிவிக்கவும், நிலுவை தொகைகள் செலுத்தவும் அறிவிப்பு அனுப்பியதில் மேற்படி கடைகாரர்கள் வாடகை உயர்வினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் பல்வேறு வழக்குகள் தொடர்ந்துள்ளார்கள். மேற்படி வழக்குகளை எதிர்த்து நகராட்சி சார்பாக எதிர்வழக்காட அரசு வழக்கறிஞர் திரு.டி.ரகு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வழக்குகள் நடைபெற்று வருகிறது.

மேற்படி வழக்குகள் திரு.டி.ரகு அரசு வழக்கறிஞர் அவர்களிடம் ஒப்படைத்தமைக்கும், 2018–2019ம் ஆண்டிற்கு வழக்காடு கட்டணம் உத்தேச செலவினம் ரூ.10,00,000/–க்கு நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் இந்நகர்மன்ற தீர்மான எண்.977 நாள்.05.07.2018ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி வாடகை உயர்வு சம்மந்தமாக நடைபெற்று வந்த சில வழக்குகளில் தீர்ப்புரை வரப்பெற்று வாடகைதாரர்களால் மேல்முறையீடு செய்யப்பட்டு அந்த வழக்குகளும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கிற்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/–க்கு நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)அவசர அவசியம் கருதி ஆணையர் / தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று செலவினம் மேற்கொள்ளலாம்.

3)மேற்படி வழக்காடு கட்டணம் ரூ.10,00,000/– நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (2196/2016/அ6)

தீர்மான எண்.2248 அனுமதிக்கப்பட்டது.

11)பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2019–2020ன்கீழ் கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் ஈடுபடும் பணியாளர்களுக்கு முகயுறை 5000 எண்ணம் கொள்முதல் செய்வதற்கு ரூ.70,000/– நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரனோ வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு முகயுறை கொள்முதல் செய்வதற்கு தேசிய பேரிடர் காலத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணியினை மேற்கொள்ள ஏதுவாக பயன்படுத்தப்படும் அனைத்து பொருட்களும் கொள்முதல் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களில் ந.க.எண்.3336/ஜே2/2020–8, நாள். 02.04.2020ல் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி Saram Enviro Servics Pvt Ltd., சென்னை நிறுவனத்தின் விலை விபரம் உள்ளூர் மார்க்கெட் விலை விபரத்திற்கேற்ப இருப்பதால் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு தேவையான முகயுறை 5000 எண்ணம் கொள்முதல் செய்வதற்கு விலைப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ள போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினாலும் மேற்கண்ட பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டதற்கான செலவினத்தொகை ரூ.70,000/–யை பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் கொரோனா வைரஸ் தடுப்பு நிவாரண 2019–2020 நிதியின்கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1)மேற்படி பணிக்கு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ3/2905/2019, நாள்.02.04.2020ல் ரூ.70,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2)மேற்படி பணிக்கு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2019–2020ன்கீழ் ரூ.70,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது, கூடுதலாக ரூ.87.00னை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3)மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (எச்1/1605/2020)

தீர்மான எண்.2249 பதிவு செய்யப்பட்டது.

12)கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல், மலேரியா, சிக்கன் குனியா மற்றும் இதர காய்ச்சல் வராமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் தற்போது எதிர்வரும் மழைகாலத்தில் கொசுக்கள் உற்பத்தியை தடுத்து கொசுக்கள் மூலம் பரவும் நோய்களை தடுக்கும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்த கொசு ஒழிப்பு மருந்துகள் இருப்பு குறைவாக உள்ளதால் கீழ்கண்ட மருந்துகளை தமிழ்நாடு மருந்துகள் வாணிப கழகத்தின்

அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து வாங்கி வழங்க துப்புரவு ஆய்வர் 13.04.2020ல் தனது குறிப்பில் கோரியுள்ளார். எனவே, 2020–2021ம் ஆண்டிற்ற் கீழ்கண்ட மருந்தினை வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.10.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | தேவையான பொருட்களின் விவரம் | தேவையான அளவு |
|---|---|---|
| 1 | பைரத்திரம் 2% எக்ஸ்ட்ராக்ட் | 400 லிட்டர் |
| 2 | அபேட் டெமிபாஸ் 50% | 400 லிட்டர் |

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்கண்ட செலவினத் தொகை ரூ.10.00இலட்சத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (எச்1/6417/2013)

தீர்மான எண்.2250 அனுமதிக்கப்பட்டது.

13)கரூர் நகராட்சியில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்கும் பணிக்காக நகராட்சி அலுவலக வளாகம், பிரிவு அலுவலகங்கள் மற்றும் அம்மா உணவகங்களுக்கு கிருமி நாசினி தெளிக்கும் (Sanitizer Dispenser Stand) கால்களை கொண்டு இயங்கும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ள இயந்திரம் 15 எண்ணம் வாங்கி வழங்க உதவி பொறியாளர் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே, கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரனோ வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை பணி மேற்கொள்ள நகராட்சி அலுவலக வளாகம், பிரிவு அலுவலகங்கள் மற்றும் அம்மா உணவகங்களுக்கு கிருமி நாசினி தெளிக்கும் (Sanitizer Dispenser Stand) கால்களை கொண்டு இயங்கும் இயந்திரம் கொள்முதல் செய்வதற்கு தேசிய பேரிடர் காலத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணியினை மேற்கொள்ள ஏதுவாக பயன்படுத்தப்படும் பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.3336/ஜே2/2020–8 நாள்.02.04.2020ல் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி **Janani Envirotech Private Limited, Coimbatore** நிறுவனத்தின் விலை விபரம் உள்ளூர் மார்க்கெட் விலை விபரத்திற்கேற்ப இருப்பதால் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணி மேற்கொள்ளும் வகையில் கிருமி நாசினி தெளிக்கும் (Sanitizer Dispenser Stand) கால்களை கொண்டு இயங்கும் இயந்திரம் 15 எண்ணிக்கை கொள்முதல் செய்வதற்கு விலைப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ள போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினாலும் கொரனோ வைரஸ் பரவாமல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள கிருமி நாசினி தெளிக்கும் (Sanitizer Dispenser Stand) கால்களை கொண்டு இயங்கும் இயந்திரம் 15 எண்ணிக்கை கொள்முதல் செய்யப்பட்டதற்கான செலவினத் தொகை ரூ.44,250/–யை பொதுநிதி அல்லது கொரோனா வைரஸ் தடுப்பு நிவாரண நிதியின்கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (1605/2020/எச்1)

தீர்மான எண்.2251 பதிவு செய்யப்பட்டது.

14)நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 06.03.2020ந் தேதி ஆய்வு கூட்டத்தில் கொரனோ வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதற்கிணங்க, கரூர் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 48 வார்டுகளில் கொரனோ வைரஸ் பரவாமல் தடுக்கும் பணியினை மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு காலுறை (Heavy Type Gumboot) 500 எண்ணம் வாங்கி வழங்க சுகாதார ஆய்வாளர்கள் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே, கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரனோ வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை பணி மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு காலுறை (Heavy Type Gumboot) 500 எண்ணம் கொள்முதல் செய்வதற்கு தேசிய பேரிடர் காலத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணியினை மேற்கொள்ள ஏதுவாக பயன்படுத்தப்படும் பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.3336/ஜே2/2020–8 நாள்.02.04.2020ல் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி **Sri Athanur Amman**

**Traders, Namakkal** நிறுவனத்தின் விலை விபரம் உள்ளூர் மார்க்கெட் விலை விபரத்திற்கேற்ப இருப்பதால் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணி மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு காலுறை (Heavy Type Gumboot) 500 எண்ணம் கொள்முதல் செய்வதற்கு விலைப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ள போதிய காலஅவகாசம் இல்லாத காரணத்தினாலும் கொரனோ வைரஸ் பரவாமல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்கு தேவையான காலுறை (Heavy Type Gumboot) 500 எண்ணம் கொள்முதல் செய்யப்பட்டதற்கான செலவினத் தொகை ரூ.5,82,960/– யை பொதுநிதி அல்லது கொரோனா வைரஸ் தடுப்பு நிவாரண நிதியின்கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். **(1605/2020/எச்1)**

தீர்மான எண்.2252 பதிவு செய்யப்பட்டது.

**15)**நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் காணொளி காட்சி மூலம் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி கொரனோ வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதற்கிணங்க, கரூர் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 48 வார்டுகளில் கொரனோ வைரஸ் பரவாமல் தடுக்கும் பொருட்டு வெளி மாநிலங்களில் இருந்தோ, வெளி மாவட்டங்களிலிருந்தோ, குறிப்பாக சென்னையில் இருந்தோ எவரேனும் வந்தாலோ உடனடியாக நகராட்சி கட்டுப்பாட்டு அறைகளுக்கு வரும் புகார்கள் மற்றும் விவரங்களை அலைபேசி வாயிலாகவும் வாட்ஸ்ஆப் மூலமாக பெற கட்டுப்பாட்டு அறைக்கு பயன்படுத்த ஆன்ட்ராயிடு அலைபேசி புதியதாக ஒன்று வாங்கி வழங்க சுகாதார ஆய்வாளர்கள் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே, கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரனோ வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை பணி மேற்கொள்ள தேசிய பேரிடர் காலத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் கொள்முதல் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.3336/ஜே2/2020–8 நாள்.02.04.2020ல் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி **Computer Park, Karur** நிறுவனத்தின் விலை விபரம் உள்ளூர் மார்க்கெட் விலை விபரத்திற்கேற்ப இருப்பதால் கரூர் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 48 வார்டுகளில் கொரனோ வைரஸ் பரவாமல் தடுக்கும் பொருட்டு வெளி மாநிலங்களில் இருந்தோ, வெளி மாவட்டங்களிலிருந்தோ, குறிப்பாக சென்னையில் இருந்தோ எவரேனும் வந்தாலோ உடனடியாக நகராட்சி கட்டுப்பாட்டு அறைகளுக்கு வரும் புகார்கள் மற்றும் விவரங்களை அலைபேசி வாயிலாகவும் வாட்ஸ்ஆப் மூலமாக பெற கட்டுப்பாட்டு அறைக்கு பயன்படுத்த ஆன்ட்ராயிடு அலைபேசி புதியதாக ஒன்று கொள்முதல் செய்வதற்கு விலைப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ள போதிய காலஅவகாசம் இல்லாத காரணத்தினாலும் கொரனோ வைரஸ் பரவாமல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்கு தேவையான VIVO Y12 அலைபேசி ஒன்று கொள்முதல் செய்யப்பட்டதற்கான செலவினத் தொகை ரூ.10,990/–யை பொதுநிதி அல்லது கொரோனா வைரஸ் தடுப்பு நிவாரண நிதியின்கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். **(1605/2020/எச்1)**

தீர்மான எண்.2253 பதிவு செய்யப்பட்டது.

**16)**கரூர் நகராட்சியில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்கும் பணிக்காக அனைத்து வார்டுகளிலும் உள்ள தெருக்கள், பொது இடங்கள், கழிப்பிடங்கள் மற்றும் பேருந்து நிலையங்களில் கிருமி நாசினிகள் தெளிக்கப்பட்டு வருகிறது, அதன் தொடர்ச்சியாக அனைத்து பகுதிகளிலும் தீவிரமாக கிருமி நீக்கம் செய்யும் விதமாக Eco Clean 50 Plus (Pharma Grade) 75 லிட்டர் கிருமி நாசினி பொது சுகாதார அவசர அவசியம் வாங்கி வழங்கிட சுகாதார ஆய்வாளர் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே, கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்கும் பணிக்காக அனைத்து வார்டுகளிலும் உள்ள தெருக்கள், பொது இடங்கள், கழிப்பிடங்கள் மற்றும் பேருந்து நிலையங்களில் கிருமி நாசினிகள் தெளிக்கப்பட்டு வருகிறது, அதன் தொடர்ச்சியாக அனைத்து பகுதிகளிலும் தீவிரமாக கிருமி நீக்கம் செய்யும் விதமாக Eco

Clean 50 Plus (Pharma Grade) கொள்முதல் செய்ய தேசிய பேரிடர் காலத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணியினை மேற்கொள்ள ஏதுவாக பயன்படுத்தப்படும் பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.3336/ஜே2/2020–8 நாள்.02.04.2020ல் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி **Shri Sakthi Agency, Erode** நிறுவனத்தின் விலை விபரம் உள்ளூர் மார்க்கெட் விலை விபரத்திற்கேற்ப இருப்பதால் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணி மேற்கொள்ளும் வகையில் Eco Clean 50 Plus (Pharma Grade) 75 லிட்டர் கிருமி நாசினி கொள்முதல் செய்வதற்கு விலைப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ள போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினாலும் கொரனோ வைரஸ் பரவாமல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள Eco Clean 50 Plus (Pharma Grade) 75 லிட்டர் கிருமி நாசினி கொள்முதல் செய்யப்பட்டதற்கான செலவினத் தொகை ரூ.1,94,700/–யை பொதுநிதி அல்லது கொரோனா வைரஸ் தடுப்பு நிவாரண நிதியின்கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (1605/2020/எச்1)

தீர்மான எண்.2254 பதிவு செய்யப்பட்டது.

17)கரூர் நகராட்சி அலுவலகத்திற்கு வரும் பொதுமக்கள் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கு கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்கும் பணிக்கு கிருமி நாசினி கொண்டு கைகளை சுத்தம் செய்தபின் அலுவலகத்திற்கு நுழையும் வகையில் தானியங்கி கிருமி நாசினியை தெளிக்கும் இயந்திரம் 4 மற்றும் 200 லிட்டர் கிருமி நாசினி வாங்கி வழங்க உதவி பொறியாளர் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே, கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரனோ வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை பணி மேற்கொள்ள அலுவலக பணியாளர் மற்றும் பொதுமக்களுக்கு கிருமி நாசினி தெளிக்கும் இயந்திரம் கொள்முதல் செய்வதற்கு தேசிய பேரிடர் காலத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணியினை மேற்கொள்ள ஏதுவாக பயன்படுத்தப்படும் பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.3336/ஜே2/2020–8 நாள்.02.04.2020ல் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி **S Staging Elements Chennai** நிறுவனத்தின் விலை விபரம் உள்ளூர் மார்க்கெட் விலை விபரத்திற்கேற்ப இருப்பதால் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணி மேற்கொள்ளும் வகையில் நகராட்சி அலுவலகத்திற்கு வரும் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு கிருமி நாசினி கொண்டு கைகளை சுத்தம் செய்ய தானியங்கி கிருமி நாசினி இயந்திரம் 4 எண்ணிக்கை அதற்கான கிருமி நாசினி 200 லிட்டர் கொள்முதல் செய்வதற்கு விலைப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ள போதிய காலஅவகாசம் இல்லாத காரணத்தினாலும் கொரனோ வைரஸ் பரவாமல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தானியங்கி கிருமி நாசினி இயந்திரம் 4 எண்ணிக்கை அதற்கான கிருமி நாசினி 200 லிட்டர் கொள்முதல் செய்யப்பட்டதற்கான செலவினத் தொகை ரூ.1,29,280/–யை பொதுநிதி அல்லது கொரோனா வைரஸ் தடுப்பு நிவாரண நிதியின்கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (1605/2020/எச்1)

தீர்மான எண்.2255 பதிவு செய்யப்பட்டது.

18)கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவுக்கு சொந்தமான COMPACTOR வாகன எண். TN 47 8809 க்கு 1,10,000 கி.மீ., தூரத்தில் ஏற்பட்டுள்ள ENGINE BREAK DOWN REPAIR AND MAINTENANCE WORK செய்ய EICHER MOTORS அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள அவ்வாகனத்தின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களிடம் முன்அனுமதி பெற்று 29.02.2020 விலை விவரப் பட்டியல் கோரியதை மன்றத்தின் அனுமதிக்கும்.

மேற்படி COMPACTOR வாகன எண். TN 47 8809 க்கு ENGINE BREAK DOWN மற்றும் மராமத்து பணிகள் செய்ய EICHER MOTORS நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற

Jailaxmi Auto Works & Agencies (P) Ltd., கரூர் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கவும், இதற்குண்டான உத்தேச செலவுத் தொகை ரூ.2,10,000/—யை பொதுநிதியில் செலவினம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)பொதுசுகாதாரப் பிரிவுக்கு சொந்தமான COMPACTOR வாகன எண்.TN 47 8809 க்கு 1,10,000 கி.மீ., துாரத்தில் ஏற்பட்டுள்ள ENGINE BREAK DOWN REPAIR AND MAINTENANCE WORK செய்ய EICHER MOTORS நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற Jailaxmi Auto Works & Agencies (P) Ltd., கரூர் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கவும், இதற்குண்டான உத்தேச செலவுத் தொகை ரூ.2,10,000/—யை பொதுநிதியில் செலவினம் செய்யவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
2)மேற்படி பொதுசுகாதார பிரிவு வாகனத்தின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3)மேற்படி வாகனத்திற்கு அரசின் உச்சவரம்பு தொகைக்கு மேல் உள்ள கூடுதல் செலலவனத் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். (எச்5/3714/2019)

தீர்மான எண்.2256 அனுமதிக்கப்பட்டது.

19)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 முதல் 23 வரையுள்ள கரூர் நகர பகுதிக்கு காவேரி ஆற்றின் கரையில் அமைந்துள்ள நெரூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து பாலம்மாள்புரம் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டியில் குடிநீர் நிரப்பப்பட்டு, அதன் மூலம் நகர பகுதிகளில் சுமார் 72.00கி.மீ., நீளத்தில் பகிர்மானக் குழாய்கள் மூலம் நகர பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் கரூர் நகரப் பகுதி வார்டு எண்.15 முதல் 23 வரையுள்ள பகுதிகளிலுள்ள பிரதான குடிநீர் குழாய்கள், பகிர்மான குழாய்கள், மின்மோட்டார்கள் மூலம் சப்ளை செய்யப்படும் குடிநீர் குழாய்களில் பொதுக்குழாய்கள், வால்வுகளில் ஏற்படும் பழுதுகள் நீர்கசிவுகளால் குடிநீர் வீணாவதை தவிர்க்கும்பொருட்டு பழுதுப் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7.00இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டி மன்றப் பொருள் வரைவு செய்து அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்குண்டான செலவினத் தொகை ரூ.7.00இலட்சத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ1/2020)

தீர்மான எண்.2257 அனுமதிக்கப்பட்டது.

20)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24 முதல் 32 வரையுள்ள கரூர் நகரப் பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்படும் குடிநீர் பிரதானக் குழாய்கள், பகிர்மானக் குழாய்கள், குடிநீர் தொட்டிகள், வால்வுகள் மினி பவர் பம்ப் பைப் லைன் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்தல் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7.00இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டி மன்றப்பொருள் வரைவு செய்து அனுமதிக்கு சமாப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்குண்டான செலவினத் தொகை ரூ.7.00இலட்சத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ1/2020)

தீர்மான எண்.2258 அனுமதிக்கப்பட்டது.

21)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 முதல் 32 வரையுள்ள பகுதிகளான காசீம் தெரு, அருணாசலம் நகர், கருப்பாயி கோவில் தெரு, மாவடியான் கோவில் தெரு, பாலம்மாள்புரம், வேம்பு மாரியம்மன் கோவில் தெரு, கருப்பாயி கோவில் தெரு ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை இணைப்பு, குடிநீர் இணைப்பு ஆகிய பணிகள் மேற்கொண்டபோது குடிநீர் குழாய்கள் பழுதாகியுள்ளதால் குடிநீர் குழாய்களை புதியதாக மாற்றி அமைத்தல் பணிகளை மேற்கொள்ள

தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டி மன்றப் பொருள் வரைவு செய்து அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்குண்டான செலவினத் தொகை ரூ.5.00இலட்சத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ1/2020)

தீர்மான எண்.2259 அனுமதிக்கப்பட்டது.

22)கரூர் நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பள்ளி அலுவலகத்தின் (1)கிழக்கு பகுதியும் மற்றும் வடக்கு தெற்காக உள்ள தரைதளம் மற்றும் முதல் தளம் கட்டிடம் (2) தரைத்தளம், முதல் தளம் மற்றும் உயிரியல் ஆய்வக ஆர்.சி.சி. கட்டிடம் ஆகியவற்றை இடித்து அப்புறப்படுத்துதல் மற்றும் அதில் கிடைக்கப்பெறும் தேக்கு மர ஜன்னல்கள், தேக்கு மரக்கதவுகள், தேக்கு மரச்சட்டங்கள், நாட்டு மருது மரச்சட்டங்கள் இரும்பு கம்பிகள், இரும்பு Beam மற்றும் GI Sheet ஆகியவற்றை ஏலம்விட ஒப்பந்தப்புள்ளி மற்றும் பகிரங்க பொதுஏலம் மூலம் எடுத்து செல்லும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பொதுமக்கள் அறியும்வண்ணம் 28.05.2020ம் தேதியன்று தினத்தந்தி நாளிதழ் மூலமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக் கட்டணம் ரூ.12,928/—யை The Daily Thanthi, Trichy அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்காணும் செலவினத் தொகை ரூ.12,928/—யை பொதுநிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/699/2019)

தீர்மான எண்.2260 அனுமதிக்கப்பட்டது.

23)கரூர் நகராட்சிக்குட்பட்ட இனாம்கரூர் பகுதியில் வாங்கல் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து வாங்கப்பாளையம் நீருந்து நிலையத்திற்கு குடிநீர் பம்பிங் செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி குடிநீரை பொதுமக்களுக்கு சுத்திகரிப்பு செய்து வழங்கும் பொருட்டு குளோரினேசன் செய்ய பயன்படுத்தும் சோடியம் ஹைப்போ குளோரைட் திரவம் 01.04.2020 முதல் ஆறுமாத காலத்திற்கு தேவையான அளவு கொள்முதல் செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00லட்சத்திற்கு நகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ3/1922/2020)

தீர்மான எண்.2261 அனுமதிக்கப்பட்டது.

24)கரூர் நகராட்சிக்கு 2018—2019ம் ஆண்டிற்கான சாலை பாதுகாப்பு திட்டத்தில் கரூர் முதல் கோவை மற்றும் கரூர் முதல் திருச்சி வரை செல்லும் நெடுஞ்சாலையில் இருபுறமும் ஒளித்தரக் கூடிய LED தெருவிளக்குகளை அமைக்கும் பணிக்கு 08.05.2020ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் Accord Advertising Agencies Chennai நிறுவனத்தின் மூலம் இந்தியன் எக்ஸ்பிரஸ் (தென்னக பதிப்பு) மற்றும் தினசெய்தி (தமிழ்நாடு பதிப்பு) ஆகிய நாளிதழ்களில் நாள்.18.03.2020 அன்று விளம்பரம் செய்யப்பட்டதற்கு விளம்பரக் கட்டண தொகை ரூ.1,41,488/—யை மேற்கண்ட நிறுவனம் Accord Advertising Agencies Chennai அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு விளம்பரம் செய்தவகையில் வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.1,41,488/—யை வழங்க கரூர் நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ3/2020)

தீர்மான எண்.2262 அனுமதிக்கப்பட்டது.

25)கரூர் நகராட்சிக்குட்பட்ட நகர பகுதிகளுக்கு குடிநீர் செய்யப்பட்டு வருகிறது. தற்பொழுது காவிரி ஆற்றில் நீரோட்டம் குறைந்துள்ளதால் கோடைக்காலத்தில் குடிநீர் தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு ஏற்கனவே அமைக்கப்பட்ட இரண்டு Ring will கடந்த 2018ம் ஆண்டு வெள்ளத்தால் பழுது ஏற்பட்டு தற்போது வட்ட கிணறு முழுவதும் மணல் நிரம்பியுள்ளதால், இரண்டு வட்ட கிணறுகளையும் துார்வாரி, புதியதாக மின்மோட்டார்கள், கேபிள்கள் மற்றும் பைப் லைன்கள் அமைத்து தரைமட்ட நீர்தேக்க தொட்டிவரை குடிநீர் குழாய் பழுதுகள் போன்ற பணிகளை மேற்கொள்ளவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.12,50,000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.12,50,000/—க்கு நகராட்சியின் குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (1145/2020/இ3)

தீர்மான எண்.2263 அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்
கரூர் நகராட்சி